கணபதிதுணை.

திருப்புல்வயல்

குமரேசர்சதகம்.

குருபாததாசர்அருளிச்செய்தது.

இஃது,

வீரணன்தோட்டம்

மதுரைமுதலியாரால்

பரிசோதித்து

அ. வீராசாமிநாயுடு

அவர்களது

சர்க்குணாநிதி யச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சுக்கில௵ தைமீ.

உ

முருகன்துணை.

குமரேசர்சதகம்.

காப்பு.

வெண்பா.

பூமேவுபுல்லைப் பொருந்துகுமரேசர்தம்மேல் *
தேமேவியசதகஞ் செப்பவே - கோமேவிக் *
காக்குஞ்சரவணத்தான் கம்பகும்பத்தைந்துகாக் *
காக்குஞ்சரவணத்தான் காப்பு. *

அவையடக்கம்.

மாரிக்குநிகரொன்றுபனிசொரிதல்போலவுமனைக்குநிகரொன்றுசிறுபெண் ணல்வீடுகட்டுவதுபோலவுஞ்சந்திரன்முன்மருவுமின்மினிபோலவும் * பாருக்குணல்லோர்முனேபித்தர்பலமொழிபகர்ந்திடுஞ்செயல்போலவும், பச்சைமயிலாடுதற்கிணையென்றுவான்கோழிபாரிலாடுதல்போலவும் பூரிக்குமினியகாவேரிக்குநிகரொன்று போதுவாய்க்கால்போலவும் * புகல்சிப்பிமுத்துக்குநிகராப்பளிங்கைப் பொருந்தவைத்ததுபோலவும் * வாரிக்குமுன்வாவிபெருகல்போலவுமின்சொல்வாணர்முனுகந்துபுல்லை வாலகுமரேசர்மேற்சதகம்புகன்றனன் மனம்பொறுத்தருள்புரிகவே()

குமரேசர்மகிமை.

பூமிக்கோராறுதலையாய்வந்துசரவணப் பொய்கைதனில்விளையாடியும் புனிதற்குமந்த்ரவுபதேசமொழிசொல்லியும் போதனைச்சிறையில்வைத்தும், தேமிக்கவரிகரப்பிரமாதிகட்குஞ் செயிக்கமுடியாவசுரனைத் * தேகங்கிழித்துவடிவேலிஞலிருகூறு செய்தமரர்சிறைதவிர்த்தும் * நேமிக்குளன்பரிடருற்றசமையந்தனி னினைக்குமுன்வந்துதவியும் * நிதமுமெய்த்துணையாய் விளங்கலாலுலகிலுனை நிகரானதெய்வமுண் டோ, மாமிக்கதேன்பெருகுபூங்கடம்பணியுமணி மார்பனே வள்ளிகண வா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (க)

அந்தணரியல்பு.

குறையாதகாயத்ரியாதிஜெபமகிமையுங் கூறுசுருதிப்பெருமையும் *
கோதிலாவாகமபுராணத்தின்வளமையுங் குலவுயாகாதிபலவும் *
முறையாநடத்தலாற் சகலதீவினைகளையு முளரிபோலேதகிப்பார் *
மூதன்மைபெறுசிலைசெம்பு பிருதுவிகளிற்றெய்வ மூர்த்தமுண்டாக்கு
விப்பார், நிறையாகநீதிநெறிவழுவார்களாகையானீண்மழைபொழிந்தி
டுவதும், நிலமதுசெழிப்பதும்மரசர்செங்கோற்புரியுநிலையுமாதவர்செய்
தவமும், மறையோர்களாலேவிளங்குமிவ்வுலகத்தின் மானிடத்தெய்வ
மிவர்காண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரே(௨

அரசரியல்பு.

குடிபடையிலபிமானமந்திராலோசனை குறிப்பறிதல்சத்தியவசனம் *
கொடைநித்தமவரவர்க்கேற்றமரியாதைபொறைகோடாதசதுருபாயம்
படிவிசாரணையொடுப்ரதானிதளகர்த்தரைப் பண்பறிந்தேயமைத்தல் *
பல்லுயிரெலாந்தன்னுயிர்க்குநிகரென்றே பரித்தல்குற்றங்களைதல் *
துடிபெறுதனக்குறுதியானநட்பகமின்மை சுகுணமொடுகல்வியறிவு *
தோலாதகாலமிடமறிதல்வினைவலிகண்டு துஷ்டநிக்ரகசௌரியம் *
வடிவுபெறுசெங்கோனடத்திவருமரசர்க்கு வழுவாதமுறைமையிதுகா
ண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௩

வணிகரியல்பு.

கொண்டபடிபோலும்விலைபேசிலாபஞ்சிறிதுகூடிவரநயமுரைப்பார் *
கொள்ளுமொருமுதலுக்குமோசம்வாராதபடி குறுகவேசிலவுசெய்வார்
வண்டப்புரட்டர்தாமறிந்துபொன்னடகுவைக்கினுங்கடனீந்திடார்
மருவுநாணயமுளோர்கேட்டனுப்பினுமவர்வார்த்தையிலெல்லாங்கொ
டுப்பார், கண்டெழுதுபற்றுவரவினின்மயிர்பிளந்தேகணக்கிலனுவாகி
லும்விடார், காசுவீணிற்செலவிடாருசிதமானதிற் கனதிரவியங்கள்விடு
வார், மண்டலத்தூடுகனவர்த்தகஞ்செய்கின்றவணிகர்க்குமுறைமையி
துகாண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே

வேளாளரியல்பு.

நல்லதேவாலயம்பூசனைநடப்பதும் நாடோறுமழைபொழிவதும் *
நாடியதபோதனர்கண்மாதவம்புரிவது நவில்வேதவேதியரெலாம் *
சொல்லரியயாகாதிகன்மங்கள்செய்வதுந் தொல்புவிசெழிக்குநலமும் *
சுபசோபனங்களுங்கொற்றவர்கள்செங்கோ றுலங்குமனுநெறிமுறை
மையும், வெல்லரியசுகிர்தமொடுவர்த்தகன்கொள்விலையும் விற்பனையுப
திகபுகழும், மிக்கவதிகாரமுந்தொழிலாளர்சீவனமும்வீரரணசூரவலிய
ம்,வல்லமைகள்சகலமும்வேளாளர்மேழியின்வாழ்வினால்விளைதலன்றோ
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௫

பிதாக்கள்.

தவமதுசெய்தேபெற்றெடுத்தவன் முதற்பிதாதனைவளர்த்தவனொருபிதா,
தயையாகவித்தையைச் சாற்றினவனொருபிதாசார்ந்தசற்குருவொருபி
தா,அவமறுத்தாள்கின்றவரசொருபிதானல்லவாபத்துவேளைதன்னில் *
அஞ்சலென்றுற்றதுயர் தீர்த்துளோனொருபிதாவன்புளமுனோனொருபி
தா,கவளமிடுமனைவியைப்பெற்றுளோனொருபிதாகலிதவிர்த்தவனொருபி
தா,காசினியிலிவரைநித்தம்பிதாவென்றுளங் கருதுவதுநீதியாகும் *
மவுலிதனின்மதியரவுபுனைவிமலருதவுசிறுமதலையெனவருகுருபரா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல் வயனீடுமலைமேவுகுமரேசனே. (௬)

ஒன்றையொன்றுபற்றியிருப்பன.

சத்தியந்தவறாதிருப்பவரிடத்தினிற்சார்ந்துதிருமாதிருக்கும்
சந்ததந்திருமாதிருப்பவரிடந்தனிற்றனதுபாக்கியமிருக்கும் *
மெய்த்துவருபாக்கியமிருக்குமிடந்தனின்விண்டுவின்கலையிருக்கும் *
விண்டுவின்கலைபூண்டிருக்குமிடந்தனின்மிக்கானதயையிருக்கும்
பத்தியுடனினியதயையுள்ளவரிடந்தனிற்பகர்தருமமிகவிருக்கும் *
பகர்தருமமுள்ளவரிடந்தனிற்சத்துருபலாயனத்திறலிருக்கும் *
வைத்திசைமிகுந்ததிற லுள்ளவரிடத்தில்வெகு மன்னுயிர்சிறக்குமன்
றோ,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௭)

இவர்க்கிவர்தெய்வமெனல்.

ஆதுலர்க்கன்னங்கொடுத்தவர்களேதெய்வமன்பானமாணுக்கருக் *
கரியகுருவேதெய்வமஞ்சினோர்க்காபத்தகற்றினோனேதெய்வமாம் *
காதலுறுகற்புடையமங்கையர்தமக்கெலாங்கணவனேமிக்கதெய்வம் *
காசினியின்மன்னுயிர்தமக்கெலாங்குடிமரபுகாக்குமன்னவர்தெய்வமா
ம்,ஓதரியபிள்ளைகட்கன்னைதந்தையர்தெய்வமுயர்ஜாதி மாந்தர்யார்க்கு
ம்,உறவின்முறையார்தெய்வம்விசுவாசமுள்ளபேர்க்குற்றசிவபத்தர்தெ
ய்வம்,மாதயையினற்சூத்திரர்க்குமறையோர்தெய்வம்வானவர்க்குத்தெய்
வம்நீ-மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.(௮)

இவர்க்கிதுநினைவெனல்.

ஞானநெறியாளர்க்குமோக்ஷத்திலேநினைவுநல்லறிவுளோர்தமக்கு *
நாடொறுந்தருமத்திலேநினைவுமன்னர்க்குராச்சியந்தன்னினினைவு *
ஆனகாமுகருக்குமாதர்மேலேநினைவுவஞ்சாததிருடருக்கிங் *
கனுதினங்களவிலேநினைவுதனவணிகருக்காதாயமீதுநினைவு *
தானமிகுகுடியாளருக்கெலாம்வேளாண்மைதனினினைவுகற்பவர்க்குத்
தருகல்விமேனினைவுவேசியர்க்கினியபொருடருவோர்கண்மீதுநினைவு *
மானபரனுக்குமரியாதைமேனினைவெற்குமாறாதுன்மீதுநினைவு *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௯)

இவர்க்கிதுவில்லையெனல்.

வேசைக்குநிசமில்லைதிருடனுக்குறவில்லைவேந்தற்குநன்றியில்லை *
மிடியற்குவிலைமாதர்மீதுவங்கணமில்லைமிலேச்சர்க்குநிறையதில்லை *
ஆசைக்குவெட்கமில்லைஞானியானவனுக்குள்ளகமில்லைமூர்க்கன்றனக் *
கன்பில்லைகாமிக்குமுறையில்லைகுணமிலோர்க்கழகில்லைசித்தசுத்தன் *
பூசைக்குநவிலங்கசுத்தியில்லையாவுமுணர்புலவனுக்கயலோரில்லை *
புல்லனுக்கென்றுமுசிதானுசிதமில்லைவருபுலையர்க்கிரக்கமில்லை *
மாசைத்தவிர்த்தமதிமுகதெய்வயானையொடுவள்ளிக்கிசைந்தவழகா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௰)

இப்படிப்பட்டவரிவரெனல்.

நியாயநெறிதவறாமலுலகபரிபாலனநடத்துமவனேயரசனும் *
ராஜயோசனைதெரிந்துறுதியாகியசெய்திநவிலுமவனேமந்திரி *
நேயமுடனேதன்சரீரத்தையெண்ணாதநிர்வாகியேசூரனும் *
நிலைபெறுமிலக்கணமிலக்கியமறிந்துசொலுநிபுணகவியேகவிஞனும் *
ஆயதொருவாகடந்தாதுவினிதானமுமறியுமுதியோன் வைத்தியன் *
அகமின்றிமெய்யுணர்ந்தைம் புலனொழித்துவிட்டவனே மெய்ஞ்ஞானி
யெனலாம்,மாயவர்சகோதரிமனோன்மணிக்கன்பான வரபுத்ரவடிவேல
வா.மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவு குமரேசனே.(௰௧)

விரைந்தடக்கத்தகுவனவிவையெனல்.

அக்கினியைவாய்மூந்துதுற்சனனைவஞ்சமனையாளைவளர் பயிர்கொள்க
ளையை,அஞ்சாவிரோதிகளையனியாயமுடையோனையகத்தியப்பெண்க
ளார்ப்பைக்,கைக்கினியதொழிலாளியைக்கொண்டவடிமையைக் களவு
செய்யுந்திருடனைக்,கருதியவிசாரத்தையடக்கமில் பலிசையைக் கடிதா
னகோபந்தனை,மெய்க்கினிதலாப்பிணியையவையுதாசீனத்தை வினைமூ
ண்டிடுஞ்சண்டையை,விஷமேறுகோரத்தையன்றடக்குவதலான்மிஞ்சி
விடலாகாதுகாண்.மைக்கினியகண்ணிகுறவள்ளிதெய்வானையை மணஞ்
செய்தபேரழகனே,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலை. (௰௨)

இவர்க்கிதுதுரும்பெனல்.

தாராளமாகக்கொடுக்குந்தியாகிகடமக்குநற்பொருடுரும்பு *
தன்னுயிரையெண்ணாதசூரனுக்கெதிராளிதளமெலாமொருதுரும்பு *
பேரானபெரியருக்கற்பாதுகையினிற்பிரயோசனந்துரும்பு *
பெரிதானமோட்சசிந் தனையுள்ளவர்க்கெலாம் பெண்போகமொருது
ரும்பு, தீராதசகலமும்வெறுத்ததுறவிக்குவிறல்சேர்வேந்தனொருதுரு
ம்பு,செய்யகலைநாமகள்கடாக்ஷமுள்ளோர்க்கெலாஞ்செந்தமிழ்க்கவிது
ரும்பாம்,வாராருமணிகொண்முலைவள்ளிதெய்வானையைமணம்புணரு
ம்வடிவேலவா,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவு. (௰௩)

இதனைவிளக்குவதிதுவெனல்.

பகல்விளக்குவதிரவிநிசிவிளக்குவதுமதிபார்விளக்குவதுமேகம் *
பதிவிளக்குவதுபெண்குடிவிளக்குவதரசுபரிவிளக்குவதுவேகம் *
இகல்விளக்குவதுவலிநிறைவிளக்குவதுநலமிசைவிளக்குவதுசுதியூ *
ரிடம்விளக்குவதுகுடியுடல்விளக்குவதுண்டி யினியசொல் விளக்குவத
ருள்,புகல்விளக்குவதுகொடைதவம்விளக்குவதறிவுபூவிளக்குவதுவாச
ம்,பொருள்விளக்குவதுதிருமுகம்விளக்குவதுநகைபுத்தியை விளக்குவ
துநூல்,மகம்விளக்குவதுமறை சொல்விளக்குவதுநிசம்வாவியை விளக்
குவதுநீர்,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகும. (௧௪)

பிறப்பிடநன்மையால்நன்மைபெறாமை.

சிங்காரவனமதிலுதிப்பினுங்காகமதுதீஞ்சொல்புகல்குயிலாகுமோ *
திரையெறியும்வாவியிற்பூத்தாலுமேகொட்டிசெங்கஞ்ச மலராகுமோ *
அங்கானகத்திற்பிறந்தாலுமுயலானதானையின்கன்றாகுமோ *
ஆண்மையாகியநல்லகுடியிற்பிறந்தாலுமசடர்பெரியோராவரோ *
சங்காடுபாற்கடல்பிறந்தாலுநத்தைதான்சாளக்கிராமமாமோ *
தடமேவுகடனீரிலேயுப்புவிளையினுஞ்சாரசர்க்கரையாகுமோ *
மங்காதசெந்தமிழ்க்குறுமுனிக்குபதேசம்வைத்தமெய்ஞ்ஞானகுருவே
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௧௫)

பலர்க்கும்பயன்படுவன.

கொண்டல்பொழிமாரியுமுதாரசற்குணமுடையகோவுமூருணியினீரும்
கூட்டமிடுமம்பலத்துறுதருவினீழலுங்குடியாளர்விவசாயமும் *
கண்டவர்களெல்லாம்வரும்பெருஞ்சந்தியிற்கனிபலபழுத்தமரமும் *
கருணையுடனேவைத்திடுந்தணீர்ப்பந்தலுங்காவேரிபோலூற்றமும் *
விண்டலத்துறைசந்திராதித்தகிரணமும்வீசுமாருதசீதமும் *
விவேகியெனுநல்லோரிடத்திலுறுசெல்வமும்வெகுசனர்க்குபகாரமாம்
வண்டிமிர்கடப்பமலர்மாலையணிசெங்களபமார்பனேவடிவேலவா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௧௬)

தாமழியினுங்குணமழியாதவை.

தங்கமானதுதழலிலின்றுருகிமறுகினுந்தன்னொளிமழுங்கிடாது *
சந்தனக்குறடுதான்மெலிந்துதேய்ந்தாலுமோதன்மணங்குன்றிடாது *
பொங்கமிகுசங்குசெந்தழலின்வெந்தாலுமோபொலிவெண்மைகுறை
வுறாது, போதவேகாய்ந்துநற்பால்குறுகினாலும் பொருந்துசுவை போ
ய்விடாது,துங்கமணிசாணையிற்றேய்ந்துவிட்டாலுந்துலங்குகுணமொ
ழியாதுபின்,தொன்மைதருபெரியோர்மடிந்தாலுமவர்களதுதாயநிறை
தவறாகுமோ,மங்களகல்யாணிகுறமங்கைவரகுஞ்சரியை மருவுதிண்புய
வாசனே,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரே(௧௭)

நரகில்வீழ்வோர்.

மன்னரைச்சமரில்விட்டோடினவர்குருமொழிமறந்தவர்கொலைப்பாத
கர்,மாதாபிதாவைநிந்தித்தவர்கள்பாதாரமருவித்திரிந்தபேர்கள் *
அன்னங்கொடுத்தபேருக்கழிவையெண்ணினோரசடக்கியவமைச்சர் *
ஆலயமிகழ்ந்தவர்கள்விசுவாசபாதகரருந்தவர்தமைப்பழித்தோர் *
முன்னுதவியாய்ச்செய்தநன்றியைமறந்தவர் முகஸ்த்துதிவழக்குரைப்
போர்,முற்றுசிவபத்தரைநடுங்கச்சினத்தவர்கண்முழுதும் பொய்யுரை
சொல்லுவோர்,மற்றொருவர்வைத்தபொருளபகரித்தோரிவர்கண்மாந
ரகில்வீழ்வரன்றோ,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலை.(௰அ)

சரீரசுகம்.

மாதத்திரண்டுவிசைமாதரைப்புல்குவது மறுவறுவிரோசனந்தான் *
வருஷத்திரண்டுவிசைதைலந்தலைக்கிடுதல்வாரத்திரண்டுவிசையாம் *
மூதறிவினொடுதனதுவயதினுக்கிளையவொருமொய்குழலுடன்சையோ
கம், முற்றுதயிர்காய்ச்சுபால்நீர்மோருருக்குநெய்முதிராவழுக்கையிள
நீர், சாதத்திலெவ்வளவானாலும்புசித்தபின் முகந்தனக்குவாங்கல் *
தயையாகவுண்டபினுலாவலிவைமேலவர் சரீரசுகமாமென்பர்காண் *
மாதவகுமாரிசாரங்கத்துதித்தகுற வள்ளிக்குகந்தசரசா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே (௰௯)

யார்க்குமனுபோகம்விடாமை.

தேசுபெறுமேருப்ரதட்சணஞ்செய்துமதி தேகவடுநீங்கவில்லை *
திருமாலுறங்கிடுஞ்சேடனுக்குவணன் செறும்பகையொழிந்ததில்லை *
ஈசன்கழுத்திலுறுபாம்பினுக்கிரைவே றிலாமலேவாயுவாகும் *
இனியகண்ணாகிவருபருதியானவனுக் கிராகுவோகணவிரோதி *
ஆசிலாப்பெரியோரிடத்தினிலடுக்கினு மமைத்தபடியன்றிவருமோ *
அவரவர்களனுபோகமனுபவித்திடல்வேண்டு மல்லால்வெறுப்படுதெவ
னை, வாசவனுமும்பரனைவரும்விஜையஜயவென்றுவந்துதொழுதேத்து
சரணா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேச (௨௰)

இதுவின்றியிதுசிறவாதெனல்.

குருவிலாவித்தைகூரறிவிலாவாணிபங்குணமிலாமனைவியாசை *
குடிநலமிலாநாடுநீதியில்லாவரசுகுஞ்சரமிலாதவெம்போர் *
திருவிலாமெய்த்திறமைபொறையிலாமாதவந்தியானமில்லாதநிஷ்டை
தீபமில்லாதமனைசோதரமிலாதவுடல்சேகரமிலாதசென்னி *
உருவிலாமெய்வளமைபசியிலாவுண்டிபுகலுண்மையில்லாதவசனம் *
யோசனையிலாமந்த்ரிதயிரியமிலாவீரமுதவியில்லாதநட்பு *
மருவிலாவண்ணமலர்பெரியோரிலாதசபைவையத்திருந்தென்பயன் *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௨௧)

பகைபடாதவரிவரெனல்.

அரசர்பகையுந்தவம்புரிதபோதனர்பகையுமரியகருணீகர்பகையும் *
அடுத்துக்கெடுப்போர் கொடும்பகையுமுட்பகையு மருளிலாக்கொலைஞ
ர்பகையும், விரகுமிகுமூரிலுள்ளோருடன்பகையுமிகு விகடப்ரசங்கிப
கையும், வெகுஜனப்பகையுமந் திரவாதியின்பகையும்விழைமருத்துவர்
கள்பகையும்,உரமருவுகவிவாணர்பகையுமாசான்பகையு முறைவின்மு
றையார்கள்பகையும்,உற்றதிரவியமுளார்பகையுமந்திரிபகையு மொரு
சிறிதுமாகாதுகாண்,வரநதியின்மதலையென வினியசரவணமிசையில்வ
ருதருணசிறுகுழவியே,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு (உஉ)

பேயெனப்படுவாரிவரெனல்.

கடனுதவுபேர்வந்துகேட்கும்வேளையின்முகங் கடுகடுக்கின்றபேயும் *
கனமருவுபெரியதனம்வந்தவுடனிறுமாந்துகண்விழிக்காதபேயும் *
அடைவுடன்சத்துருவின்பேச்சைவிசுவாசித்தகப்பட்டுழன்றபேயும் *
ஆசைமனையாளுக்குநேசமாயுண்மைமொழியானதையுரைத்தபேயும், *
இடரிலாநல்லோர்கள்பெரியோர்களைச்சற்றுமெண்ணாதுரைத்தபேயும் *
இனியபரிதானத்திலாசைகொண்டொருவர்க்கிடுக்கண்செய்திட்டபேயு
ம், மடமனையிருக்கப்பரத்தையைப்புணர்பேயும் வகைபெற்றபேய்கள
ன்றே,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே.()

அவ்வவ்வினத்திலுயர்ந்தவை.

தாருவிற்சந்தான நதியினிற்கங்கைவிர தத்தினிற்சோமவாரம் *
தகைபெறுநிலத்தினிற்காஸ்மீரகண்டந்தலத்திற்சிதம்பரதலம் *
சீருலவுரிஷிகளில்வசிட்டர்பசுவிற்காமதேனுமுனிவரினாரதன் *
செல்வநவமணிகளிற்றிகழ்பதுமராகமணி தேமலரிலம்போருகம் *
பேருலவுகற்பினிலருந்ததிகதித்திடுபெலத்தின்மாருதம்யானையிற் *
பேசிலைராவதந்தமிழினிலகத்தியம் பிரணவமந்திரத்தில் *
வாரிதியிலேதிருப்பாற்கடல்குவட்டினின்மகாமேருவாகுமன்றே *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (உ௪)

அவரவர்க்குப்பெலமாவன.

அந்தணர்க்குயர்வேதமேபெலங்கொற்றவர்க் கரியசௌரியமேபெலம் *
ஆனவணிகர்க்குநிதியேபெலஞ்சூத்திரர்க்காயினேருழவேபெலம் *
மந்திரிக்குச்சதுருபாயமேபெலநீதி மானுக்குநடுவேபெலம் *
மாதவர்க்குத்தவசுபெலமடவியர்க்குநிறைமானமிகுகற்பேபெலம் *
தந்திரமிகுத்தகனசேவகர்தமக்கெலாஞ்சாமிகாரியமேபெலம் *
சான்றவர்க்குப்பொறுமையேபெலம்புலவோர்தமக்குநிறை கல்விபெல
மாம், வந்தனைசெபம்பூசைசெய்பவர்க்கன்புபெலம் வாலவடிவானவே
லா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (உ௫)

இருந்தும்பயன்படாதவை.

தருணத்தி லுதவிசெய்யாதநட்பாளர்பின்றந்தெனதராமலென்ன *
தராதரமறிந்துமுறை செய்யாதமன்னனாச்சார்ந்தென்ன நீங்கிலென்
ன, பெருமையுடனுண்மையில்லாதவொருபிள்ளையைப் பெற்றெனபெ
றுமலென்ன, பிரியமாயுள்ளன்பிலாதவர்கணேசம் பிடித்தெனவிடுக்கி
லென்ன, தெருளாகமானமில்லாததொருசீவனஞ் செய்தெனசெயாம
லென்ன, தேகியெனவருபவர்க்கீயாதசெல்வஞ் சிறந்தெனமுறிந்துமெ
ன்ன,மருவிளமைதன்னிலில்லாதகன்னிகைபின்பு வந்தெனவராமலென்
ன,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே.(உசு)

உபகாரமில்லாதவை.

கடனீர்மிகுத்தென்ன வொதிதான்பெருத்தென்னகாட்டிலவு மலரிலென்
ன, கருவேல்பழுத்தென்ன நாய்ப்பால்சுரந்தென்ன கானின்மழைபெய்
துமென்ன, அடர்கழுதைலத்திநிலமெல்லாங்குவிந்தென்ன வரியகுணமி
ல்லாதபெண், அழகாயிருந்தென்னவாஸ்தானகோழைபலவரிய நூலோ
தியென்ன, இடமினியபூதம்வெகு பொன்காத்திருந்தென்ன திறன்மிகு
ங்கரடிமயிர்தான்,செறிவாகநீண்டென்னவஸ்திரபூஷணமெலாஞ்சித்தி
ரத்துற்றுமென்ன, மடமிகுந்தெவருக்குமுபகாரமில்லாத வம்பர்வாழ்
வுக்குநிகராம்,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகு.(உஎ

பதரெனப்படுவோர்.

தன்பெருமைசொல்லியேதன்னைப்புகழ்ந்தபதர் சமர்கண்டொளிக்கும்
பதர், தக்கபெரியோர்புத்திகேளாதபதர்தோழர் தம்மொடுசலிக்கும்ப
தர்,பின்புகாணாவிடந்தன்னிலேபுறணிபல பேசிக்களிக்கும்பதர் *
பெற்றதாய்தந்தைதுயர் படவாழ்ந்திருந்தபதர் பெண்புத்திகேட்கும்ப
தர்,பொன்பணமிருக்கவேபோயிரக்கின்றபதர் பொய்சாட்சிசொல்லும்
பதர்,புவியோர்நடத்தையையிகழ்ந்தபதர்தன்மனைவி புணர்தல்வெளியா
க்கும்பதர், மன்புணரும்வேசையுடன் விபசரிக்கின்றபதர்மனிதரிற்பத
ரென்பர்காண், மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடு மலைமேவு(உ

காணாவிடிற்றுயரப்படுமவை.

இரவிகாணாவனச மாரிகாணாதபயி ரிந்துகாணாதகுமுதம்
ஏந்தல்காணாநாடுகளைகள்காணாவோடமிஞ்சொல்காணாவிருந்து
சுரபிகாணாதகன்றன்னைகாணாமதலைசோலைகாணாதவண்டு
தோழர்காணாநேயர்கலைகள்காணாதமான்சோடுகாணாதபேடு
குரவர்காணாதசபைதியாகிகாணாவறிஞர்கொழுநர்காணாதபெண்கள்
கொண்டல்காணாதமயில்சிறுவர்காணாவாழ்வுகோடைகாணாதகுயில்கள்
வரவுகாணாதசெலவிவையெலாம்புவிமீதில்வாழ்வுகாணாவிளமையாம்
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடு மலைமேவுகுமரேசனே. (உ

வியாதிமூலங்கள்.

கல்லினான்மயிரினான்மீதூண் விரும்பலாற்கருதியவிசாரத்தினால் *
கடுவழிநடக்கையான்மலசலமடக்கையாற்கனிபழங்கறியுண்ணலால் *
நெல்லினாலுமியினாலுண்டபின்மூழ்கலானித்திரைகளில்லாமையால் *
நீர்ப்பகையினாற்பனிக்காற்றிலுட்டேதலானீடுசருகிலையூறலால் *
மெல்லிநல்லார்கலவியதிகமுள்விரும்பலால்வீழ்மலஞ்சிக்குகையினால் *
மிகுசுமையெடுத்தலாலிளவெயிற்காய்தலான்மெய்வாடவேலைசெயலால்
வல்லிரவிலேதயிர்கள்சாதாதியுண்ணலால்வன்பிணிக்கிடமென்பர்காண்
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௬௰)

செத்துஞ்சாகாதவர்.

அணைவர்க்குமுபகாரமாம்வாவிகூவமுண்டாக்கினோர் நீதிமன்னர் *
அழியாததேவாலயங்கட்டிவைத்துளோ ரகரங்கள்செய்தபெரியோர் *
தனையொப்பிலாப்புதல்வனைப்பெற்றபேர்பொருது சமர்வென்றசுத்த
வீரர், தரணிதனினிலைநிற்கவெந்நாளுமாறாததருமங்கள்செய்தபேர்கள்
கனவித்தைகொண்டவர்களோயாத கொடையாளர்காவியஞ் செய்தகவி
ஞர்,கற்பினின்மிகுத்தவொரு பத்தினிமடந்தையைக் கடிமணஞ் செய்
தோர்களும்,மனிதர்கள்சரீரங்கள்போகினுஞ்சாகாதமனிதரி வராகுமன்
றோ,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேச. (௬க)

சாகாதிருந்துஞ்செத்தவர்.

மாறாதவறுமையோர்தீராதபிணியாளர்வருவேட்டகத்திலுண்போர் *
மனைவியைவழங்கியேசீவனஞ்செய்குவோர்மன்னுமொருராஜசபையில்
தூறுகநிந்தைசெய்துய்குவோர்சிவிகைகள்சுமந்தேபிழைக்கின்றபேர் *
தொலையா விசாரத்தழுந்துவோர் வார்த்தையிற் சோர்வுபடலுற்றபெரி
யோர்,வீறுகமனையாடனக்கஞ்சிவந்திடுவிருந்தினையொழித்துவிடுவோர்
வீம்புடன்சொல்லாதவிவகாரமதுகொண்டுமிக்கசபையேறுமசடர் *
மாறுகவிவொலா முயிருடன்செத்தசவமாகியொளிமாய்வர் கண்டாய்
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே (௬௨)

சிறிதும்பயன்படாதவர்.

பதராகிலுங்கனவிபூதிவிளைவிக்கும்பழமைபெறுசுவராகிலும் *
பலருக்குமறைவாகுமாடுறைஞ்சிடுமலம்பன்றிகட்குபயோகமாம் *
கதமிகுகடாவென்னிலுழுதுபுவிகாக்கும்வன்கழுதையும் பொதிசுமக்கு
ம்,கல்லெனிற்றேவர்களுமாலயமுமாம் பெருங்கான்புற்றுமரவு மனையா
ம், இதமிலாச்சவமாகிலுஞ்சிலர்க்குதவிசெயுமிழிவுறுகுரங்காயினும் *
இரக்கப்பிடித்தவர்க்குதவிசெயும்வாருகோலேற்றமாளிகைவிளக்கும் *
மதமதுமிகும்பரமலோபராலுபகார மற்றொருவருக்குமுண்டோ *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௬௩)

உலுத்தரியல்பு.

திரவியங்காக்குமொருபூதமேபோற்பணந்தேடிப்புதைத்துவைப்பார் *
சீலநலமாகவுங்கட்டார்கணல்லபுதுசெய்துணாறமுஞ்செயார் *
புரவலர்செய்தண்டந்தனக்கும்வலுவாகப்புகுந்திருடருக்குமீவார் *
புலவரைக்கண்டவுடனேடிப்பதுங்குவார்புராணிகர்க்கொன்றுமுதவார்
விரகறிந்தேபிள்ளை சோறுகறிதினுமளவில் வெகுபணஞ்செலவாகுமா
ல்,விளையாடுகிழவனைம்பிள்ளையேபிள்ளையென மிகுசெட்டி சொன்னக
தைபோல்,வரவுபார்க்கின்றதேயல்லாதுலோபியர்கண்மற்றொருவருக்கீ
வரோ,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேச. (௫௪)

திருவாழிடங்கள்.

கடவாரணத்திலுங்கங்காசலத்திலுங்கமலாசலந்தன்னிலும் *
காகுத்தன்மார்பிலுங்கொற்றவரிடத்திலுங்காலியின்கூட்டத்திலும் *
நடமாடுபயிரிலும்பொய்வார்த்தைசொல்லாதநல்லோரிடந்தன்னிலும்
நல்லசுபலக்ஷணமிகுந்தமனைதன்னிலும்ரணசுத்தவீரர்பாலும் *
அடர்கேதனத்திலுஞ்சுயம்வரந்தன்னிலுமருந்துளசிவில்வத்திலும் *
அலர்தருகடப்பமலர்தனிலுமிரதத்திலுமதிகுணமானரூப *
மடவாரிடத்திலுங்குடிகொண்டுதிருமாதுமாறாதிருப்பளன்றோ *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௫)

மூதேவிவாழிடங்கள்.

சோரமங்கையர்கணிசமுறையார்கள்வாயினிற்சூதகப்பெண்கணிழலில்
சூளையிற்சூழ்தலுறுபுகையிற்களேபரஞ்சுடுபுகையினீசர்நிழலில் *
காரிரவிலரசுணிழலிற்கடாநிழலினெடுகருதியவிளக்குநிழலில் *
காமுகரினிஷ்டையில்லாதவர்முகத்திற்கடுஞ்சினத்தோர்சபையினில் *
ஈரமில்லாக்களர்நிலத்திலிராத்திரியிலிழியுமதுபானர்பாலில் *
இலைவேல்விளாநிழலினிதமழுக்கடைமனையிலேனவாயசகாத்தூள் *
வாரியமுறத்தூள்பெருகுதூண்மூதேவிமாறாதிருப்பளென்பார் *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௫௬)

திருத்தினுந்திருந்தாமை.

கட்டியெருவிட்டுச்செழுந்தேனைவார்க்கினுங்காஞ்சிரங்கைப்புவிடுமோ
கழுதையைக்கட்டிவைத்தோமம்வளர்க்கினுங்கதிபெறுங்குதிரையாமோ
குட்டியாவுக்கமுதளித்தேவளர்க்கினுங்கொடுவிஷமலாதுதருமோ *
குக்கனெடுவாலுக்குமட்டையைக்கட்டினுங்கோணமலே நிமிருமோ *
ஒட்டியேகுறுணிமையிட்டாலுநயமிலா யோநிகண்ணாகிவிடுமோ *
உலவுகனகர்ப்பூரவாடைபலகூட்டினுமுள்ளியின்குணமாறுமோ *
மட்டிகட்காயிரம்புத்திசொன்னாலுமதின்மார்க்கமரியாதைவருமோ *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௫௭)

குறிப்பறிதல்.

மனதிற்கடும்பகைமுகத்தினலறியலா மாநிலப்பூடுகளெலாம் *
மழையினலறியலா நல்லார்பொலார்தமை மக்களாலறியலாகும் *
கனமருவுசூரனைச்சமரினலறியலாங் கற்றவொருவித்துவானைக் *
கல்விப்ரசங்கத்தினலறியலாங்குணங் களைநடையினலறியலாம் *
தனதகமடுத்ததுபளிங்கினலறியலாஞ் சாதிசொல்லாலறியலாம் *
தருநீதிகேள்வியாலறியலாம்பிணிகளைத் தாதுக்களாலறியலாம் *
வனசவிகசிதவசனபரிபூரணனந்த வாலவடிவானவேலா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௩௮)

குணமாறுமை.

குணமிலாதுஷ்டமிருகங்களையுநயகுணங் கொண்டுட்படுத்திவிடலாம் *
கொடியபலவிஷநோய்களியாவையுமௌஷதமது கொடுத்துத்திருப்பிவி
டலாம், உணர்விலாப்பிரமராக்ஷசிமுதற்பேய்களைப்புகழ்ந்துகூத்தாட்டி
விடலாம், உபாயத்தினற்பெரும்பறவைக்குநற்புத்தியுண்டாக்கலாமுயி
ர்பெறப், பிணமதையெழுப்பலாமக்கினிசுடாமற்பெரும்புனலெனச்செ
ய்யலாம், பிணியையுமகற்றலாங் காலதூதுவனையும் பின்புவருகென்று
சொலலாம், மணலையுங்கயிறுத்திரிக்கலாங்கயவர்குணமட்டுந்திருப்பவ
சமோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேச (௩௯)

இத்தீக்குணத்தோரிவ்விலங்குபோல்வரெனல்.

தான்பிடித்ததுபிடிப்பென்றுமேலவர்புத்தி தள்ளிச்செய்வோர்குரங்கு *
சபையிற்குறிப்பறியமாட்டாமனின்றவர்தாம்பயனிலாதமரமாம் *
வீம்பினலெளியவனையெதிர்பண்ணிநிற்குமொருவெறியர்குறைநமவி
யாவார், மிகநாடிவருவோர்முகம்பார்த்திடாலோபர்மேன்மையில்லாத
கழுதை, சோம்பலொடுபெரியோர்சபைக்குட்படுத்திடுந்தூங்கலேசண்
டிக்கடா, சூதுட்னடந்தோர்க்கிடுக்கணேசெய்திடுந் துஷ்டனேகொட்
டுதேளாம், மாம்பழந்தனைவேண்டியந்நாளிலீசனைவலமாகவந்தமுருகா
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௪௰)

அற்பர்வாழ்வால்குணம்வேறுபடுதல்.

அற்பர்க்குவாழ்வுசற்றதிகமானல்விழிக் கியாவருருவுந்தோன்றிடா *
தண்டிநின்றேநல்லவார்த்தைகளுரைத்தாலுமவர்செவிக்கேறிடாது *
முற்பக்ஷமானபேர்வருகினும்வாருமென மொழியவும்வாய்வராது *
மோதியேவாதப்பிடிப்புவந்ததுபோல முன்காலையகலவைப்பார் *
விற்பனமிகுத்தபெரியோர்செய்திசொன்னலும்வெடுவெடுத்தேகிநிற்பா
ர், விருதாமகத்துவப்பேயதுசவுக்கடி விழும்போதுதீருமென்பார் *
மற்புயந்தனினீபமாலையணிலோலனே மார்பனேவடிவேலவா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௪௧)

இத்தீங்குளோரிக்கோள்போல்வரெனல்.

அன்னைதந்தையர்புத்திகேளாதபிள்ளையோ வஷ்டமச்சனியாகுவான்
அஞ்சாமலெதிர்பேசிநிற்குமனையாள்வாக்கி லங்காரகச்சன்மமாம்
தன்னைமிஞ்சிச்சொன்ன வார்த்தைகேளாவடிமை சந்திராஷ்டகமென
னலாம், தன்பங்குதாவென்றுசபையேறுதம்பியோசார்ந்தசன்மச்சூரி
ன், நன்னயமிலாதவஞ்சனைசெய்ததமையன்மூன்றுமிடத்தில்வியாழம்
நாடொறும்விரோதமிடுகொண்டோன்கொடுத்துளோன் ராகுகேதுக்
ளெனலாம், மன்னயனையன்றுசிறை தனிலிட்டுநம்பற்குமந்திரமுரை
தகுருவே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரே. (சு

நல்லினஞ்சேர்பயன்.

சந்தனவிருக்ஷத்தைபண்டிநிற்கின்றபல தருவுமவ்வாசனைதரும்
தங்கமகமேருவைறபடுத்திடுங்காக்கையுஞ் சாயல்பொன்மயமேதரும்
பந்தமிகுபாலுடன்விளாவியதணீரெலாம் பால்போனிறங்கொடுக்கும்
படிகமணிகட்குளே நிற்கின்றவட்டமுமப் படியேகுணங்கொடுக்கும்
அந்தமிகுமரகதக்கல்லைத்தறித்திடி லடுத்ததும்பசுமையாகும்
ஆனபெரியோர்களொடுசகவாசமதுசெயிலவர்கள்குணம்வருமென்ப
காண், மந்திரநெடுங்கிரியின்முன்கடல்கடைந்தவரிமருகமெய்ஞ்ஞா
குரவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேச (சு

வலியோரையுமூழ்விடாமை.

அன்றுமுடிசூடுவதிருக்கரகுராமன்முனருங்காடுறைந்ததென்ன
அண்டரெல்லாமமிர்தமுண்டிடப்பரமனுக் காலம்லபித்ததென்ன
வென்றிவருதேவர்சிறைமீட்டநீகளவில்வேடச்சியைச்சேர்ந்ததென்
மேதினிபடைக்குமயனுக்கொருசிரம்போகிவெஞ்சிறையிலுற்றதென்
என்றுமொருபொய்சொலா மன்னவன்விலைபோனதென்னகாண்வல்
மையினால், எண்ணத்திலொன்றும்வாராதுபரமசிவ னெந்தனப்ப
முடியுமாம், மன்றுதனினடனமிடுகங்காதரன்பெற்றவரபுத்ர வடிவே
வா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (சு

பெரியோர்வாக்கியபரிபாலனஞ்செய்தோர்.

தந்தைதாய்வாக்கியபரிபாலனஞ்செய்தவன் தசரதகுமாரராமன்
தமயனருள்வாக்கியபரிபாலனஞ்செய்தோர் தருமனுக்கிளைய நால்வர்
சிந்தையிலுணர்ந்துகுருவாக்கியபரிபாலனஞ் செய்தவனரிச்சந்திர
தேகியென்றோர்க்கிலையெனுவாக்யபாலனஞ் செய்தவன்றுனகன்ன
நிந்தைதவிர்வாக்யபரிபாலனஞ்செய்தவ னீள்பெலமிகுத்தவனுமான்
நிறையுடன்பத்தாவின்வாக்யபரிபாலன நிலத்தினினளாகினிசெய்தா
மந்தைவழிகோயில்குளமுங்குலவுதம்பிமுகன்மகிழ்தாவுகந்தணை
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (சு

முயற்சியின்மிக்கதூமெனல்.

வங்காளமேறுகினும்வாருகோலொருகாசு மட்டன்றியதிகமாமோ *
வானேறியுயரப்பறந்தாலுமூர்க்குருவி வண்ணப்பருந்தாகுமோ *
கங்காசலந்தனின்மூழ்கினும்பேய்ச்சுரைக் காய்நல்லசுரையாகுமோ *
கடலுக்குள் நாழியையமுக்கியேமொண்டிடிற்காணுமோ நாழிதான் *
ஐங்காதமோடினுந்தன்வினைகடன்றேடேயடையாமனீங்கிவிடுமோ *
ஆரிடஞ்சென்றாலும்வெகுதொலைகள்சுற்றினு மமைத்தபடியன்றிவரு
மோ, மங்காதசெந்தமிழ்கொண்டுநற்கீரற்கு வந்ததுயர்தீர்த்தமுருகா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௬௬)

இடும்பாலழிவு.

சூரபத்மன்பெலமிராவணன்வீரமுந் துடுக்காணகஞ்சன்வலியும் *
துடியானவிரணியன்வரப்ரசாதங்களுந் தொலையாதவாலிதிடமும் *
பாரமிகுதுரியோதனதிநூற்றுவரது பராக்கிரமமுமதுகைடவர் *
பாரிப்புமாபெலிதனண்மையுஞ்சோமுகன்பாங்கிலுறுவல்லமைகளும் *
ஏரணவுகீசகன்கனதையுந்திரிபுரரெண்ணமுந்தக்கனெழிலும் *
இவர்களதுசம்பத்துநின்றதோவாவவரவ ரிடும்பாலழிந்தவன்றோ *
மாரனைக்கண்ணலெரித்தருள்சிவன்றந்த வரபுத்ரவடிவேலவா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே (௬௭)

நட்புநிலை.

சீர்மதியின்முயலானததுதேய்வுழித்தேய்ந்து வள்ருமப்போதுவளரும் *
வாவிதனிலாம்பல்கொட்டிகளதனினீர்வற்றின் வற்றிடும்பெருகிலுயரு
ம், பூமருவுபுதல்பூண்டுகோடையிற்றீய்ந்திடும்பொங்குகாலந்தழைக்கு
ம், புண்டரிகமிரவிபோமளவிற்குவிந்திடும் போதுதயமாகின்மலரும் *
தேமுடலிளைக்கிலுயிர்கூடவுமிளைக்குமது தேறிலுயிருஞ்சிறக்கும் *
சேர்ந்தோர்க்கிடுக்கணதுவந்தாலுநல்லோர் சிநேகமப்படியாகுமோ *
வாமனசுரூபமதயானைமுகனுக்கிளைய வாலகுருபரவேலவா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடு மலைமேவுகுமரேசனே. (௬௮)

கைப்பலனவை.

பருவத்திலேபெற்றசேயும்புரட்டாசி பாதிசம்பா நடுகையும் *
பலமினியவாடிதனிலானைவால்போலவே பயிர்கொண்டுவருகரும்புங் *
கருணையொடுமிக்கநாணயமுளோர்கையினிற் கடனிட்டுவைத்தமுதலு
ம், காலமதுநேரிற்றனக்குறுதியாகமுன் கற்றுணர்ந்திடுகல்வியும் *
விருதரசனைக்கண்டுபழகியசிநேகமும் விவேகிகட்குபகாரமும் *
வீணல்லவிவையெலாங்கைப்பலனதாகவபி விர்த்தியாய்வருமென்பர்கா
ண், மருவுலாவியநீபமாலையுந்தண்டாள மாலையும்புனைமார்பனே *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௬௯)

சமயத்துக்குதவாதவை.

கல்லாதுபுத்தகந்தனிலெழுதிவீட்டினிற் கட்டிவைத்திடுவித்தையும் *
காலங்களுக்குதவவேண்டுமென் றன்னியன் கையிற்கொடுத்தபொருளு
ம், இல்லாளை நீங்கியேபிறர்பாரிசதமென் றிருக்கின்றகுடிவாழ்க்கையும்
ஏறுமாறாகவேதேசாந்தரம்போ யிருக்கின்றபிள்ளைவாழ்வும் *
சொல்லானதொன்றுமவர் மனமானதொன்றுமாச் சொல்லும்வஞ்சகர்
நேயமும், சுகியுமாயுண்டென்றிருப்பதெல்லார்க்குந் துரிதத்திலுத
வாதுகாண், வல்லானகொங்கைமடமாதுதெய்வானைகுறவள்ளிபங்காள
நேயா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேச. (௫௰

திரும்பமாட்டாதவை.

ஆடரவின்வாய்தனிலகப்பட்டதவளையு மானைவாயிற்கரும்பும் *
அரிதானசப்பலிற்பாய்மரக்காற்றினி லகப்பட்டுமெலிகாக்கையும் *
நாடறியவேதாரைவார்த்துக்கொடுத்தது நமன்கைக்குளானவுயிரும் *
நலமாகவேயணைகடந்திட்டவெள்ளமு நாய்வேட்டைபட்டமுசலும்
தேடியுண்பார்கைக்குளானபலவுடைமையுந் தீவாதையானமனையும் *
திரள்கொடுங்கோலரசர் கைக்கேறுபொருளுந் திரும்பிவாராதென்பர்
காண், மாடமிசையன்னக்கொடித்திரள்கொள்சோணாடு வாழவந்திடு
முதல்வனே, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகும(௫௧

இதினுமிது நன்றென்பவை.

கடுகடுத்தாயிரஞ்செய்குவதிலின்சொலாற் களிகொண்டழைத்தனன்று *
கனவேள்வியாயிரஞ்செய்வதிற்பொய்யுரை கருத்தொடுசொலாமைநன்
று, வெடுவெடுக்கின்றதோரவிவேகியுறவினின் விவேகியொடுபகைமை
நன்று, வெகுமதிகளாயிரஞ்செய்வதினொக்காசுவேளைகண்டுதவனன்
று. சடுதியிற்பக்குவஞ்சொல்லுங்கொடைக்கிங்குசற்றுமில்லையென்னனன்
று, சம்பத்துடன்பிணியின்மெலிகுவதினோயற்றதாரித்திரியநன்றுகாண்
மடுவினிற்கரியோலமென்னவந்தருள்செய்தமான்மருகனைமுதல்வா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௫௨

பலகூடினும் ஒன்றற்கீடாகாதவை.

தாரகைகளொருகோடிவானத்திருக்கினுஞ் சந்திரற்கீடாகுமோ
தாருவிற்கொடிதொனிகள் பலகூடினாலுமொரு தம்பட்டவோசையா
மோ, கோரமிகுபன்றியின்குட்டிபலகூடினொருகுஞ்சரக்கன்றாகுமோ
கொட்டிமலர்வாவியிற்பலகூடினாலுமொரு கோகனகமலராகுமோ
பாரமிகுமாமலைகள்பலகூடினாலுமொரு பைம்பொன்மகமேருவாமோ
பலனிலாப்பிள்ளைகளனேகம்பிறந்தாலிற் பனொருவனுக்குநிகரோ
வாரணக்கொடியொருகரத்திற்பிடித்தொன்றில்வடிவேலணிந்தமுருக
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௫௩

அருமையறிதல்.

மணமாலையருமையைப்புனைபவர்களேயறிவர் மட்டிக்குரங்கறியுமோ
மக்களுடையருமையைப் பெற்றவர்களேயறிவர் மலடிதானறிவதுண்
டோ, கணவருடையருமையைக்கற்பானமாதறிவள் கணிகையானவளறி
வளோ,கருதுமொருசந்தியின்பாண்டமென்டதைவருங்களவானநாயறி
யுமோ, குணமானகிளியருமைதனைவளர்த்தவரறிவர் கொடியபூனைய
றியுமோ,குலவுபெரியோரருமைநல்லோர்களேயறிவர்கொடுமூடர்தாம
றிவரோ,மணவாளனீயென்றுகுறவள்ளிபின்றொடரவனமூடுதழுவுமழ
கா,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௪)

தீச்சார்வாற்பயன்படாதவை.

மடுவினிற்கஞ்சமலருண்டொருவரணுகாமல்வன்முதலையங்கிருக்கும் *
மலையினிற்றேனுண்டுசென்றொருவர்கிட்டாமன்மருவியதில் வண்டிரு
க்கும்,நெடுமைநிகழ்தாழைமலருண்டொருவரணுகாம னீங்காதமுள்ளி
ருக்கும்,நீடுபலசந்தனவிருக்ஷமுண்டணுகாது நீளரவுசூழ்ந்திருக்கும் *
குடிமல்கிவாழ்கின்றவீட்டினிற்செல்லாதுகுரைநாய்களங்கிருக்கும் *
கொடுக்குந்தியாகியுண்டிடையூறுபேசுங்கொடும்பாவியுண்டுகண்டாய் *
வடுவையுங்கடுவையும்பொருவுமிருகண்ணிகுறவள்ளிக்குகந்தகணவா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௫)

கணிகையரிழிவு.

தேவதாசிகள்வீடுசந்தைப்பெரும்பேட்டைசேர்ந்திடுபடுக்கைவீடு *
தெருவாசல்கட்டில்பொதுவம்பலமுடுத்ததுகில்செய்யசூதாடுசோலை *
மேவலாகியகொங்கைகையாடுதிரள்பந்துவிழிமனங்கவர்தூண்டிலாம் *
மிக்கமொழிநீர்மேலெழுத்ததிகமோகமொரு மின்னலிருதுடைசர்ப்ப
மாம், ஆவலாகியவல்குலோதண்டம்வாங்குமிடமதிகடடாமனதுகல் *
அமிர்தவாயிதழ்சித்ரச்சாலையெச்சிற்குழியவர்க்காசைவைக்கலாமோ *
மாவடிவுகொண்டேயொளித்தவொருசூரனைவதைத்தவடிவேலாயுதா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௬)

கலிகாலக்கொடுமை.

தாய்புத்திசொன்னான்மறுத்திடுங்காலமுயர்தந்தையைச்சீறுகாலம் *
சற்குருவைநிந்தைசெய்காலமெய்க்கடவுளைச்சற்றுமெண்ணாதகாலம் *
பேய்தெய்வமென்றுபசரித்திடுங்காலம்பிறட்டருக்கேற்றகாலம் *
பெண்டாட்டிவையினுங்கேட்கின்றகாலநற் பெரியர்சொல்கேளாதகால
ம்,தேய்வுடன்பெரியவன்சிறுமையுறுகாலமிகு சிறியவன்பெருகுகாலம் *
செருவில்விட்டோடினோர்வரிசைபெறுகாலம்வசை செப்புவோர்க்குத
வுகாலம்,வாய்மதம்பேசிவிடுமனியாயகாரர்க்குவாய்த்தகலிகாலமைய்யா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௭)

அவரவர்க்குரியவை.

கல்வியொடுகனமுறச்சபையின்மேல்வட்டமாக்காணவைப்போன்பிதா
வாம்,கற்றுணர்ந்தேதனதுபுகழாற்பிதாவைப்பிரகாசஞ்செய்வோன்புத்
திரன்,செல்வமிகுகணவனைதெய்வமென்றனுதினஞ்சிந்தைசெய்பவள்
மனைவியாம்,சிநேகிதன்போலவேயன்புவைத்துண்மைமொழிசெப்பும
வனேசோதரன்,தொல்வளமிகுந்தநூற்களைதெரிந்துறுதிமொழிசொல்
லுமவனேகுரவனும், சொன்னநெறிதவறாமல்வழிபாடுசெய்துவருது
ய்யனேயினியசீஷன், வல்லிரகமிஞ்சுசுரகுஞ்சரியுடன்குறவர்வஞ்சியை
மணந்தகணவா,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவு.(௫௮)

சிறுமையிற்பெருமை.

சேற்றிற்பிறந்திடுங்கமலமலர்கடவுளது திருமுடியின்மேலிருக்கும் *
திகழ்சிப்பியுடலிற் சனித்தமுத்தரசனதுதேகத்தின்மேலிருக்கும் *
போற்றியிடுபூச்சியின்வாயினூல்பட்டென்றுபூசைக்குநேசமாகும் *
புகலரியவண்டெச்சிலானதேன்றேவர்கொள் புனிதவபிஷேகமாகும் *
சாற்றியபுலாலொடுபிறந்தகோரோசனை சவாதுபுழுகணைவர்க்குமாம் *
ஜாதியீனத்திற்பிறக்கினுங்கற்றோர்கள் சபையின்மேல்வட்டமன்றோ *
மாற்றிச்சுரத்தினைவிபூதியாலுடல்குளிரவைத்தமெஞ்ஞானமுதலே *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௫௯)

செய்யத்தகாதவை.

தானுசரித்துவருதெய்வமிதுவென்றுபொய்ச்சத்தியஞ்செயல்விடாது *
தன்வீட்டிலேற்றியவிளக்கென்றுமுத்தந்தனைக்கொடுத்தாலதுசுடும் *
ஆனாலுமேலவர்கண்மெத்தநவுந்தனதென்றடாதுசெய்யிற்கெடுதியாம் *
ஆனைதான்மெத்தப்பழக்கமானாலும்செயாதுசெய்தாற்கொன்றிடும் *
தீனனெனினுமென்றுமீதூண்விரும்பினுற்றேகபீடைகளேதரும் *
ஜெகராஜர்தனுமென்னவேலாதகாரியஞ்செய்தான்மனம்பொறார்காண்
வானாடுபுகழுமொருசோணாடுதழையவிவண்வந்தவதரித்தமுதலே *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௬௰)

நடுவுநிலை.

வந்தவிவகாரத்தினினியபரிதானங்கள்வருமென்றுநேசமென்றும் *
வன்பகைஞனொன்றுமயலோனொன்றுமிக்கதனவானென்று மேழையென்
றும்,இந்தவகையைக்குறித்தொருபக்ஷபாதமோரொள்ளளவுரைத்திடாம
ல்,எண்ணமுடனேவிகிதபத்தியொடுசாக்ஷிக்குமேற்கச்சபாசபதமா *
முந்தவிருதலையுஞ்சமன்செய்தகோல்போன்மொழிந்திடுந்தர்மமதுகா
ண்,முனைவிமனுடல்பாதியிருகந்தனக்கென்றமுன்னருமர் சொன்னத
லைவா,மைந்தனெனவன்றுமைமுலைப்பால்கொடுத்திட வளர்ந்தருள்கு
ழந்தைவடிவே,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவு. (௬௧)

பக்ஷபாதம்.

ஓரவிவகாரமாவந்தவர்முகம்பார்த்துரைப்போர்மலைக்குரங்காம் *
உயர்வெள்ளெருக்குடன் முளைத்துவிடுமவரில்லமுறையுமூர்பாழ்நத்த
மாம்,தாரணியிலிவர்கள்கிளைநெல்லியிலைபோலுருகுஞ்சமானமாவெழுபி
றப்பும், சந்ததியிலாதுழல்வரவர்முகத்தினின்மூத்த தையலே குடியிரு
ப்பாள், பாரமிவமொன்றுபுவிமங்கையு நடுங்குவள் பழித்ததுன்மரணமா
வார்,புகர்முடிவிலேரவுர வாதிநரகத்தனுபவிப்ப ரெப்போதுமென்பார் *
வாரமுடனருணகிரிநாதருக்கனுபூதிவைத்தெழுதியருள்குருபரா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௬௨)

ஒன்றிலாமையாற்சிறவாதவை.

கொங்கையில்லாதவட்கெத்தனைப்பணியுடைமைகூடினும் பெண்மையி
ல்லை,கூறுநிறைகல்வியில்லாமலெத்தனைகவிதைகூறினும் புலமையில்லை *
சங்கையில்லாதவர்க்கெத்தனைவிவேகந்தரிக்கினுங்கனதையில்லை *
சட்சுவைபதார்த்தவகையுற்றாலுநெய்யிலாச்சாதமுந்திர்ப்தியில்லை *
பங்கயமிலாமலெத்தனைமலர்கள்வாவியிற்பூரித்துமேன்மையில்லை *
பத்தியில்லாமல்வெகுநியமமாயர்ச்சனைகள்பண்ணினும்பூசையில்லை *
மங்கையரிலாமனைக்கெத்தனையருஞ்செல்வம்வரினுமில்வாழ்க்கையில்லை
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௬௩)

அளவுபடாதவை.

வாரியாழத்தையும்புனலெறியுமலைகளையுமானிடர்கள்ஜனனத்தையும் *
மன்னவர்கணினைவையும்புருஷர்யோகங்களையும்வானினுயர்நீளத்தையு
ம், பாரிலெழுமணலையும்பலபிராணிகளையும்படியாண்டமன்னவரையும்
பருப்பதத்தின்னிறையுமீசுரச்செயலையும்பனிமாரிபொழிதுளியையும் *
சீரியதமிழ்ப்புலவர்வாக்கிலெழுகவிதையுஞ்சித்தர்தபதுள்ளத்தையும் *
தெரிவையர்கள்சிந்தையையு மிவ்வளவெனும்படி தெரிந்தளவிடக்கூடு
மோ,வாரிசமடந்தைகுடிகொண்டநெடுமாலுக்குமருகனென வந்தமு
ருகா,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேச. (௬௪)

பிறர்மனை நயத்தல்.

தந்தாரமன்றியேபரதாரமேனினைவுதனைவைத்தகாமுகர்க்குத் *
தயையில்லைநிசமில்லைவெட்கமிலைசமரினிற்றைரியஞ்சற்றுமில்லை *
அந்தாரமில்லைதொடர்முறையில்லைநிலையில்லையறிவில்லைமரபுமில்லை *
யறமில்லைநிதியில்லையிரவினிற்றனிவழிக் கச்சமோமனதிலில்லை *
நந்தாதசனமில்லையினமில்லையெவருக்குநட்பில்லைகனதையில்லை *
நயமில்லையிளமைதனில்வலுமையிலைமுற்றிபெறுஞானமிலை யென்பர்க
ண்டாய்,மந்தாரபரிமளசுகந்தாதிபுனையுமணிமார்பனே யருளாளனே *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௬௫)

மானம்விடாமை,

கனபாரமேறிற்பிளந்திடுவதன்றியேகற்றூண் வளைந்திடாது *
கருதலர்களாலுடைந்தாலுமுயிரளவிலேகனசூரனமரின்முறியான் *
தினமோரிடுக்கண்வந்துற்றாலும்வேங்கைதோல்சீவனளவிற்கொடாது*
திறமானபெரியோர்சரீரங்கள்போகினுஞ்செப்புமுறைதவறிடார்கள்*
வனமேறுசவுரிமானுயிர்போகுமளவுந்தன்மயிரிலொன்றுங்கொடாது *
வாராதவாபத்துவருகினுங்கற்புடையமாதுநிறைதவறிநடவாள் *
மனதாரவுனதடைக்கலமென்றகீரர்க்குவன்சிறைதவிர்த்தமுருகா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௬௬)

திருவருட்சிறப்பு.

திருமகள்கடாட்சமுண்டாகிலெவருக்குஞ்சிறப்புண்டுகனதையுண்டு சென்றவழியெல்லாம் பெரும்பாதையாய்விடுஞ் செல்லாதவார்த்தைசெல்லும், பொருளொருதுரும்புமரியாதையாஞ் செல்வமோ புகல்பெருக்காறுபோலாம், புவியின்முன்கண்டுமறியாதபேர்பழகினவர்போலவேனேசமாவார், பெருமையொடுஜாதியிலுயர்ச்சிதருமனுதினம் பேரும்ப்ரதிஷ்டையுண்டாம், பிரியமொடுபகையாளிகூடவுறவாகுவான்பேச்சினிற்பிழைவராது, வருமென நினைத்தபொருள் கைகூடி வருமதிகவல்லமைகண்மிகவுமுண்டாம்,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீ. (௬௭)

நட்புநிலை.

கதிரவனுதிப்பதெங்கேநளினமெங்கேகளித்துளமலர்ந்ததென்ன *
கார்மேகமெங்கேபசுந்தோகையெங்கேகருத்தினட்பானதென்ன *
மதியமெங்கேபெருங்குமுதமெங்கேமுகமலர்ந்து மகிழ்கொண்டதென்
ன, வல்லிரவுவிடிவதெங்கேகோழியெங்கேமகிழ்ந்துகூவிடுதலென்ன *
நிதியரசரெங்கேயிருந்தாலுமவர்களொடுநேசமொன்றாயிருக்கும் *
நீதிமிகுநல்லோர்களெங்கிருந்தாலுமவர்நிறைபக்ஷமறவார்கள்காண் *
மதிலுடன்கோபுரமும்வாவியும்புடைசூழமருவுசோணாட்டதிபனே *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே. (௬௮)

காலமறிதல்.

காகம்பகற்காலம்வென்றிடுங்கூகையைக்கனகமுடியரசர்தாமும் *
கருதுசெயகாலமதுகண்டந்தவேளையிற்காரியமுடித்துவிடுவார் *
மேகமுங்கார்காலமதுகண்டுபயிர்விளையமென்மேலுமாரிபொழியும் *
மிக்கானவறிவுளோர்வருதருணகாலத்தின்மிடியாளருக்குதவுவார் *
நாகரிகமுறுகுயில்வசந்தகாலத்திலேநலமென்றுவந்துகூவும் *
நல்லோர்குறித்ததைப்பதறாமலந்தந்தநாளையின்முடிப்பர்கண்டாய் *
வாகனையகாலைகன்மாலைபுல்லெனுமுலகவாடிக்கைநிசமல்லவோ *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (௬௯)

இடமறிதல்.

தரையதனிலோடுதேர் நீள்கடலிலோடுமோ சலதிமிசையோடுகப்பல் *
தரைமீதிலோடுமோ தண்ணீரிலுறுமுதலை தன்முனேகரி நிற்குமோ *
விரைமலர்முடிப்பரமர்வேணியரவினைவெல்லமிகுகருடனாகுமோ *
வேங்கைகளிருக்கின்ற காடுதனிலஞ்சாமல்வேறொருவர்செல்லவசமோ
துரைகளைப்பெரியோரையண்டிவாழ்வோர்தமைத் துஷ்டர்பகையென்
னசெய்யும், துணைகண்டுசேரிடமறிந்துசேரென்றௌவை சொன்னக
தைமெய்யல்லவோ, வரையூதுமாயனையடுத்தலாற்பஞ்சவர்கள் வன்போ
ர்செயித்ததன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல் நீடுமலை. (எய)

யாக்கைநிலையாமை.

மனுநன்மாந்தாதாமுனனவர்களெல்லாருமண்மேலிருந்துவாழ்ந்து *
மடியாதிருந்தபேரில்லையவர்தேடியதை வாரிவைத்தவருமில்லை *
பணியதனைநம்பியேயோர்பூட்டுகதையெனப் பாழானவுடலைநம்பிப் *
பார்மீதிலின்னம்வெகு நாளிருப்போமென்று பலகோடிநினைவையெண்
ணி, அனிதமாய்விருதாவின்மாய்வதேயல்லாமலன்பாகநின்பதத்தை *
யர்ச்சித்துமுத்திபெறல்வேண்டுமென்றெண்ணார்க ளாசைவலையிற்சுழ
லுவார், வனிதையர்கள்காமாவிகாரமேபகையாகு மற்றுமொருபகையு
முண்டோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல் வயல்நீடுமலைமேவுகும(எக

வேட்டகத்திகழ்ச்சி.

வேட்டகந்தன்னிலேமருகன்வந்திடுமளவின்மென்மேலுமுபசரித்து *
விருந்துகள்சமைத்துநெய் பாற்றயிர்பதார்த்தவகை வேண்டுவதெலாம
மைப்பார், ஊட்டமிகுவர்க்கவகைசெய்திடுவர்தயிலமிட் டுறுதியாய்மு
ழுகுவிப்பார், ஓயாதுதின்னவேபாக்கிலைகொடுத்திடுவ ருற்றநாளாகி
லோ, நாட்டமொருபடியிறங்குவதுபோன்மரியாதை நாளுக்குநாள்கு
றைவுறும், நகைசெய்வர்மைத்துனர்க ளலுவல்பார்போமென்று நாணு
மல்மாமிசொல்வாள், வாட்டமனையாளொருதுரும்பாய்மதிப்பளவன் ம
ட்டியிலுமட்டியன்றோ, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடு(எஉ)

செல்வநிலையாமை.

ஓடமிடுமிடமதுமணற்சுடுஞ்சுடுமிடமு மோடமிகவேநடக்கும் *
உற்றதோராற்றின்மடுமேடாகுமேடெலாமுறுபுனல்கொண்மடுவாயிடு
ம், நாடுகாடாகுமுயர்காடுநாடாகிவிடு நவில்சகடுமேல்கீழதாய் *
நடையுறுசந்தைபலகூடுமுடனேகலையும் நன்னிலவுமிருளாய்விடும் *
நீடுபகல்போயபின்பிரவாகுமிரவுபோய் நிறைபகற்போதாய்விடும் *
நிதியோர்மிடித்திடுவர்மிடியோர்செழித்திடுவர் நிசமல்லவாழ்வுகண்டா
ய், மாடுமனைபாரிசனமக்கணிதிபூஷணமு மருவுகனவாகுமன்றோ *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (எங)

பிறந்தார்பெறும்பேறு.

சடமென்றெடுத்தாற்புவிக்குநல்லவனென்று தன்பேர்விளங்கவேண்டும்
சதிருடனிதல்லாதுமெஞ்ஞானியென்றவ தரிக்கவேவேண்டுமல்லால் *
திடமினியரணசூரவீரனிவனென்னவேதிசைமெச்சவேண்டுமல்லால் *
தேகியெனவருபவர்க்கில்லையென்னாமலேசெய்யவேவேண்டுமல்லால் *
அடைவுடன்பலகல்வியாராய்ந்துவித்துவானாகவேவேண்டுமல்லால் *
அறிவானதுரைமக்களாகவரவேண்டுமிவ ரதிகபூபாலனாயா *
வடகுவடுகிடுகிடெனவெழுகடலுமலையெறிய மணியுரகன்முடிகணெ
ரிய,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே.(எசு

வேசைநிந்தை.

தேடித்தம்வீட்டிற்பணக்காரர்வந்திடிற்றேகசீவன்போலவே *
சிநேகித்தவும்மையொருபொழுதுகாணாவிடிற் செல்லுறாதன்னமென்
றே, கூடிச்சுகிப்பதொன்றாசையுன்மேலென்று கூசாமலாணையிடுவார் *
கொங்கையைவெடிக்கப் பிடிக்கக்கொடுத்திதழ் கொடுப்பர்சும்பனமுக
ப்ப, வேடிக்கைபேசியேகைமுதல்பறித்தபின் வேறுபடநிந்தைசெய்து
விடவிடப்பேசுவார்தாய்கலகமூட்டியே விட்டுத்துரத்திவிடுவார் *
வாடிக்கையாயிந்தவண்டப்பாத்தையர் மயக்கத்தைநம்பலாமோ. *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (எஎ)

இதற்கிதுஉறுதியெனல்.

கைக்குறுதிவேல்வின்மனைக்குறுதிமனையாள்கவிக்குறுதிபொருளடக்கம்
கன்னியர்தமக்குறுதிகற்புடைமைசொற்குறுதிகண்டிடிற்சத்யவசனம் *
மெய்க்குறுதிமுன்பின்சபைக்குறுதிவித்வசனம்வேசையர்க்குறுதிதேட
ல், விரகருக்குறுதிபெண்மூப்பினுக்குறுதியூண் வீரருக்குறுதிதீரம் *
செய்க்குறுதிநீராரும்பார்க்குறுதிசெங்கோல் செழும்படைக்குறுதிவேழ
ம், செல்வந்தனக்குறுதிபிள்ளைகணவற்குறுதிசேர்ந்திடுஞ்சற்சனர்களா
ம், மைக்குறுதியாகியவிழிக்குறமடந்தைசுர மங்கைமருவுந்தலைவனே *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (எகூ)

வறுமையிற்சிறுமை.

வறுமைதான்வந்திடிற்றாய்பழுதுசொல்லுவாள், மனையாட்டிசற்றுமெ
ண்ணாள்,வாக்கிற்பிறக்கின்றசொல்லெலாம்பொல்லாதவசனமாய்வந்து
விளையும், சிறுமையொடுதொலையாவிசாரமேயல்லாதுசிந்தையிற்றைரிய
மிலை,செய்யசபைதன்னிலேசென்றுவரவெட்கமாஞ் செல்வரைக்காணி
னும், உறுதிபெறுவீரமுங்குன்றிடும்விருந்துவரி னுயிருடன்செத்த
பிணமாம், உலகம்பழித்திடும்பெருமையோர்முன்புசென் றொருவரொ
டுசெய்திசொன்னால், மறுவசனமுன்சொலார்துன்பினிற்றுன்பமிதுவந்
தணுகிடாதருளுவாய்,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலை(எள

தீச்சார்பானன்மையிழப்பு.

ஆனதண்ணீரினிழல்பார்த்திடத்தவளைசென் றங்கேகலக்கியுலவும் *
ஆயிரம்பேர்கூடிவீடுகட்டிடிலேக மறைகுறளொருடனேவரும் *
ஏனைநற்பெரியோர்கள் போஜனஞ்செயுமளவி லீக்கிடந்திசைக்கேட்டா
ம், இன்பமிகுபசுவிலேகன்றுசென் றூட்டுநற் கினியகோனது தடுக்கும் *
சேனைமன்னவரென்னகருமநியமிக்கினுஞ் சிறியோர்களாற்குறைபடும்
சிங்கத்தையும்பெரியரிஷபத்தையும்பகைமைசெய்தனொருநரியல்லவோ
மானையுந்திகழ்தெய்வயானையுந்தழுவுமணி மார்பனேயருளாளனே *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (எஅ)

இடையூறுற்றும்பயன்படுமவை.

ஆறுதண்ணீர்வற்றிவிட்டாலுமூற்றுநீ ரமுதபானங்கொடுக்கும் *
ஆதவனையொருபாதிகட்செவிமறைத்தாலுமப்போதுமுதவிசெய்வன் *
கூறுமதிதேய்பிறையதாகவேகுறையினுங்குவலயத்திருள்சிதைக்கும் *
கொல்லைதான்சாவிபோய்விட்டாலுமங்குவரு குருவிக்குமெய்ச்சலுண்
டு, வீறுடனுதாரிநான்மிடியானபோதினிலு மிகநாடிவருபவர்க்கு *
வேறுவகையில்லையென் றுரையாதியன்றளவியந்துள மகிழ்ந்துதவுவா
ன், மாறுபடுசூரசங்காரகெம்பீரனே வடிவேலணிந்தமுருகா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (எகூ)

இன்னவர்க்கிதுவில்லையெனல்.

சார்பிலாதவருக்குநிலையேதுமுதலிலா தவருக்கிலாபமேது *
தயவிலாதவர்தமக்குறவேதுபணமிலா தார்க்கேதுவேசையுறவு *
ஊரிலாதவர்தமக்கரசேதுபசிவேளை யுண்டிடார்க்குறுதிநிலையே *
துண்மையில்லாதவர்க்கறமேதுமுயல்விலார்க் குறுவதொருசெல்வமே
து, சோர்விலாதவருக்குமற்றுமொருபயமேது சுகமிலார்க்காசையேது *
நற்குணமிலாதவர்க்கெதிராளியேதிடர்செய் துஷ்டர்க்கிரக்கமேது *
மார்புருவவாலிமேலஸ்திரம்விடுத்தநெடு மான்மருகனானமுருகா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (அ0)

இதினுமிது நன்றெனல்.

பஞ்சரித்தருமையறியார்பொருளையெய்தலிற்பலர்மனைப்பிச்சைநன்று *
பரிவாகவுபசாரமில்லாவிருந்தினிற் பட்டினியிருக்கைநன்று *
தஞ்சமொருமுயலையடுவென் றிதனில்யானையொடு சமர்செய்துதோற்ற
னன்று, சரசகுணமில்லாதபெண்களைச்சேர்தலிற் சந்நியாசித்தனன்று *
அஞ்சலார்தங்களொடுநட்பாயிருப்பதனி லரவினொடுபழகுவதுநன்
றந்தணர்க்காபத்திலுதவாதிருப்பதனி லாருயிர்விடுத்தனன்று *
வஞ்சகருடன்கூடிவாழ்தலிற்றனியே வருந்திடுஞ்சிறுமைநன்று *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேசனே. (அக)

நிலையாதவை.

கொற்றவர்கள்ராஜனுவமுமாறுநேராகிய குளங்களுநீதாசியுறவும்
குணமிலார்நேசமும்பாம்பொடுபழக்கமுங் குலவுநீர்விளையாடலும்
பற்றலார்தமதிடைவருந்துவிசுவாசமும் பழையதாயாதிநிணறும்
பரதாரமாதரதிபோகமும்பெருகிவரு பாங்கானவாற்றுவரவும்
நற்றுமொருதுற்புத்திகேட்கின்றபேருறவு நல்லமதயானைநட்பும்
நாவின்லுறவுமொருநாள்போலிராதவைக ணம்பப்படாதுகண்டாய்
மற்றுமொருதுணையில்லைநீதுணையெனப்பரவும் வானவர்கள்சிறைமீ
டவா,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேச (அ

நற்புலவர்தீப்புலவர்செயல்.

மிக்கானசோலையிற்குயில்சென்றுமாங்கனி விருப்பமொடுதேடிநாடு
மிடைகருங்காகங்களெக்கனியிருந்தாலும் வேப்பங்கனிக்குநாடும்
எக்காலும்வரிவண்டுபங்கேருகத்தினி லிருக்கின்றதேனைநாடும்
எத்தனைசுகந்தவகையுற்றாலுமுருகுவண் டினந்துர்மலத்தைநாடும்
தக்கோர்பொருட்சுவைநயங்களெங்கேயென்று தாம்பார்த்துகந்துகொ
ள்வார், தாழ்வானவன்கண்ணர்குற்றமெங்கேயென்றுதமிழிலாராய்வா
ண்டாய், மைக்காவிவிழிமாதுதெய்வானையுங்குறவர் வள்ளியுந்தழுவ
லைவா,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேச (அ

தாழ்தற்பெருமை.

வேங்கைகள்பதுங்குதலு மாமுகில்ஒதுங்குதலும்விரிசிலைகுனிந்திடுத
ம், மேடமதகன்றிடலும்யானைகளொடுங்குதலும்வெள்விடைகள்துள்
விழலும்,மூங்கில்கள்வணங்குதலுமேலவரிணங்குதலும் முனிவர்கண
ந்துகொளலும், முதிர்பட்டையொதுக்குதலும் விஞ்ஞர்களடங்குதலு
றிஞர்பயந்திடுதலும், ஆங்காவுசாய்குதலுமகிழ்மலருலர்ந்திடலு மா
குழல்சூடிடலும், அம்புவியிலிவைகாரியங்களுக்கல்லாமலதனு லிளை
புவருமோ, மாங்கனிக்காவரனைவலமதுபுரிந்துவளர்மதகரிக் கிளையமு
கா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (அ

தெய்வச்செயல்.

சோடமரத்திற்புறாவொண்டிருந்திடத் துறவுகண்டேவேடுவன்
தோலாமலவையெய்யவேண்டுமென்றொருகணை தொடுத்துவில்வாங
நிற்க, ஊடாடிமேலேயெழும்பிடிலடிப்பதற் குலவுராசாளிகூட
உயரப்பறந்துகொண்டேதிரியவப்போது நைத்தசிலைவேடனடியில்
சோடாகவல்விஷந்தீண்டவேயவன்விழச் சிலையிற்றொடுத்தவாளி
சென்றிராஜாளிமெய்தைத்துவிழவவ்விரு சிறைப்புறாவாழ்ந்தவன்றே
வாடாமலிவையெலாஞ் சிவன்செயல்களல்லாதுமனச்செயலி னாலு
ருமோ,மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயல்நீடுமலைமேவுகுமரேச

பாடலியல்பு.

எழுத்தசைகள்சீர்தளைகளடிதொடைகள்சிதையா திருக்கவேவேண்டும
ப்பால், ஈரைம்பொருத்தமொடுமதுரமாய்ப்பளபளப்பினியசொற்கமை
யவேண்டும், அழுத்தமிகுகுறளினுக்கொப்பாகவேபொருளடக்கமுமி
ருக்கவேண்டும், அன்பானபாவினமிசைந்துவரல்வேண்டுமுனலங்கார
முற்றதுறையில், பழுத்துளமுவந்தோசையுற்றுவரல்வேண்டும் படிக்
குவிசைகூடல்வேண்டும், பாங்காகவின்னவைபொருந்திடச் சொற்கவி
தை பாடிற்சிறப்பென்பர்காண், மழுத்தினஞ்செங்கைதனில் வைத்தகங்
காளனருண் மைந்தனெனவந்தமுருகா, மயிலேறிவிளையாடுகுக (௮௬)

விபூதிதரிக்குமுறைமை.

பத்தியொடுசிவசிவாவென்றுதிருநீற்றைப் பரிந்துகையாலெடுத்துப் *
பாரினில்விழாதபடியண்ணாந்துசெவியொடு பருத்தபுயமீதிலொழுக *
நித்தமூவிரல்களானெற்றியினழுந்தலுற நினைவாய்த்தரிப்பவர்க்கு *
நீடுவினையணுகாதுதேகபரிசுத்தமா நீங்காமணிமலனங்கே *
சத்தியொடுநித்தம்விளையாடுவன்முகத்திலே தாண்டவஞ்செய்யுந்திரு *
சஞ்சலம்வராதுபரகதியுதவுமிவரையே சத்தியுஞ்சிவனென்னலாம் *
மத்தினியமேருவெனவைத்தமுதினைக்கடையுமான்மருகனைமுருகா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகுமரேசனே (௮௭)

விபூதிவாங்குமுறைமை.

பரிதனிலிருந்துமுயல்சிவிகையிலிருந்துமுயர் பலகையிலிருந்துமிகவே
பாங்கானவம்பலந்தனிலேயிருந்தும் பருத்ததிண்ணையிலிருந்தும் *
தெரிவொடுகொடுப்பவர்கள்கீழ்நிற்கமேனின்றுதிருநீறுவாங்கியிடினும்
செங்கையொன்றாலும்விரன் மூன்றாலும்வாங்கினுந் திகழ்தம்பலத்தி
னோடும், அ[illegible]யதொருபாதையினடக்கின்றபோதிலுமசுத்தநிலமானவதி
லும், அங்கேதரிக்கிலுந்தந்திடிற்றள்ளினுமவர்க்குநரகென்பர்கண்டா
ய், வரிவிழிமடந்தைகுறவள்ளிநாயகிதனை மணந்துமகிழ்சகநாதனே *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே. (௮௮)

இவ்வுறுப்பாற்பயனில்லெனல்.

தேவாலயஞ்சுற்றிடாதகாலென்னகால் தெரிசியாக்கண்ணென்னகண் *
தினமுமேநின்கமலபாதத்தைநினையாத சிந்தைதானென்னசிந்தை *
மேவாகமஞ்சிவபுராணமவைகேளாமல் விட்டசெவியென்னசெவிகள் *
விமலனைவணங்காதசென்னியென்சென்னிபணி விடைசெயாக்கையெ
ன்னகை, நாவாரநினையேத்திடாதவாயென்னவாய் நற்றீர்த்தமூழ்காவு
டல், நானிலத்தென்னவுடல்பாவியாகியசனன நண்ணினுற்பலனேதுகா
ண், மாவாகிவேலைதனில்வருசூரன்மார்புருவ வடிவேலைவிட்டமுருகா *
மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடு மலைமேவுகுமரேசனே (௮௯)

யோக்கியாயோக்கியம்.

பாலிறைடுதேன்வந்துசேரில்ருசியதிகமாம் பருகுநீர்சேரிலென்னும் * பவளத்தினிடைமுத்தைவைத்திடிற்சோபிதப் படிகமணிகோர்க்கிலென்று, மேலினியமன்னர்பால்யானைசேர்வதுகனதை மேஷமதுசேரிலென்னும், மிக்கானதங்கத்தினவமணியுறிற்பெருமை வெண்கல்லழுத்திலென்னும், வாலிபமினோர்களுடனிளையோர்கள்சேரினலம் வளைகிழவர்சேரிலென்னும், மருவுநல்லோரிடம்பெரியோர்வரிற்பிரியம் வருகயவர்சேரிலென்னும், மாலிகைதரித்தமணிமார்பனேதெய்வானை வள்ளிக்குவாய்த்தகணவா, மயிலேறிவிளையாடுகுகனேபுல்வயனீடுமலைமேவுகும (௲௮)

பெரியோரியல்பு.

அன்னதானஞ்செய்தல் பெரியோர்சொல்வழிநிற்ற லாபத்தில்வந்தபேருக், கபயங்கொடுத்திடுத லல்வினஞ்சேர்ந்திடுத லாசிரியன்வழிநின்றவன், சொன்னமொழிதவறாதுசெய்திடுதல்தாய்தந்தை துணையடியருச்சனைசெயல், சோம்பலில்லாமலுயிர் போகினும்வாய்மைமொழி தொல்புவியினாட்டிவிடுதல், மன்னரைச்சேர்ந்தொழுகல் கற்புடையமனைவியொடு வைகினுந்தாமரையிலை, மருவுநீரொளவுறுகலிவையெலாமேலவர்த மாண்பென்றுரைப்பரன்றோ, வண்மயின்மேலிவர்ந் திவ்வுலகையொருநொடியில்வலமாகவந்தமுருகா, மயிலேறிவிளையாடுகுக.(௲௧)

நூற்பயன்.

வன்னமயிலேறிவருவேலாயுதக்கடவுண் மலைமேலுகந்தமுருகன், வள்ளிக்கொடிக்கினியவேங்கைமரமாகினோன்வானவர்கள்சேனைபதி, கன்னன்மொழியுமையாடிருப்புதல்வனரன்மகன் கங்கைபெற்றருள்புத்திரன் கணபதிக்கிளையவொரு மெய்ஞ்ஞானதேசிகக் கடவுளாவினன்குடியினன், பன்னரியபுல்வயலில் வாலகுமரேசர்மேற் பரிந்துகுருபாததாசன் பாங்கானதமிழாசிரியவிருத்தத்தினறை பாட்டொருநூறுநாடி, நன்னயமதாகப்படித்தபேர்கேட்டபேர் நாடோறுங்கற்றபேர்கள், ஞானயோகம்பெறுவர் பதவியாவும்பெறுவர் நன்முத்தியும்பெறுவரே. (௱)

குமரேசர்சதகம்

முற்றுப்பெற்றது.